








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## ஏப்ரல் - 2019

*We Are Here..!! To Guide You..!!*










# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## ஏப்ரல் - 06.04.2019

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்
- விருதுகள்
- முக்கிய தினங்கள்











## தமிழக நிகழ்வுகள்

- தூத்துக்குடி மாவட்டத்தின் ஆதிச்சநல்லூரிலிருந்து கண்டெடுக்கப்பட்ட பழமையான பொருட்கள், **கார்பன் காலக் கணிப்பின் மூலம் கி.மு 905 முதல் கி.மு 696 ற்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவை என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.**
    - தொல் கைவினைப் பொருட்களின் கார்பன் காலக் கணிப்பானது அமெரிக்காவில் உள்ள **பீட்டர் அனலடிக்** பரிசோதனை ஆய்வகத்தில் நடைபெற்றது.

## இந்திய நிகழ்வுகள்

- **இந்திய ரிசர்வ் வங்கியானது தனது ரெப்போ விகிதத்தை 0.25 புள்ளிகள் குறைத்து 6 சதவிகிதமாக நிர்ணயித்துள்ளது.**
    - மேலும் தற்போதைய நிதியாண்டிற்கான **GDP – ன் முந்தைய கணிப்பான 7.4 சதவிகிதத்திலிருந்து குறைத்து GDP ஆனது 7.2 சதவிகிதமாக இருக்கும் என கணித்துள்ளது.**
- குறிப்பு:
    - **ரெப்போ விகிதம் (Repo Ratio)** என்பது இந்திய ரிசர்வ் வங்கியானது மற்ற வணிகம்சார் வங்கிகளுக்கு கடன் வழங்கும் விகிதம் ஆகும்.

We Shine Academy TM

## உலக நிகழ்வுகள்

- தென் கொரியாவின் நாடு தழுவிய அளவில் 5G அதிவேக இணைய சேவை தொடங்கப்பட்டுள்ளது.
    - இதன் மூலம் உலகிலேயே அதி வேக இணையச் சேவையை தொடங்கியுள்ள முதலாவது நாடாக தென்கொரியா உருவெடுத்துள்ளது.

      குறிப்பு:- **5G சேவையை தொடங்கிய முதல் மாவட்டம் ஷாங்காய் (சீனா) என்பது குறிப்பிடத்தக்கது**

## விளையாட்டு நிகழ்வுகள்

- சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு (FIFA) தர வரிசைப் பட்டியலில் **இந்தியா கால்பந்து அணி 101 வது இடத்தைப் பிடித்துள்ளது.**
    - இப்பட்டியலில் **பெல்ஜியம் அணி முதலிடத்திலும் பிரான்ஸ்**

அணி இரண்டாம் இடத்திலும் உள்ளது.
  - ஆசிய நாடுகளின் பட்டியலில் இந்தியா 18வது இடத்தைப் பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- உயிரணு மற்றும் மூலக்கூறு உயிரியல் மையத்தைச் **(CCMB – Centre for Cellular & Molecular Biology)** சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் பாக்டீரியாக்களின் செல்சுவரை உடைப்பதில் உதவுகின்ற **"முரெய்ன் எண்டோ பெட்டியாஸ்"** என்ற நொதியைக் கண்டுபிடித்துள்ளனர்.
- குறிப்பு:-
  - உயிரணு மற்றும் மூலக்கூறு உயிரியல் மையம் 1977 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதன் தலைமையகம் ஹைதராபாத்தில் உள்ளது.

## விருதுகள்

- வன விலங்கு சரணாலயம் மற்றும் அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளை பல்லுயிர் பெருக்கப் பாதுகாப்பிற்கு பெரும் பங்களிப்பை அளித்தற்காக வழங்கப்படும் **"புவி நாள் அமைப்பு நட்சத்திர விருதானது" (Earth day Network star Award)** நாகலாந்தின் வனக் காவலரான **"அலெம்பா இம்சுங்கர்"** (Alemba Yimchunger) என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
  - புவி நாள் அமைப்பானது 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் 22 (புவி தினம்) அன்று ஏற்படுத்தப்பட்டது.

## முக்கிய தினங்கள்

- **தேசிய கடல்சார் தினம் - ஏப்ரல் 5 (National Maritime Day)**
  - இந்தியக் கப்பல் துறையின் மக்களுக்கு வெளிகாட்டும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 5 அன்று தேசிய கடல்சார் தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - தேசிய கடல்சார் தினமானது ஏப்ரல் 5, 1964 முதல் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.
  - 2019 ஆம் ஆண்டின் தேசிய கடல்சார் தினத்தின் கருத்துரு:- **"Indian Ocean An ocean of opportunity"** என்பதாகும்.

We Shine Academy